## தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை - 2014

---

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் (என்டபிள்யூஎஸ்டிபீ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, மூலதன மாற்றங்களின் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும், ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்படவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் (என்டபிள்யூஎஸ்டிபீ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1. இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எல்கேஏஎஸ்)

பின்வரும் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

**(அ)** **எல்கேஏஎஸ் 1 – நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு –** ஆண்டிற்கான இலாபம் உரிமை மூலதன மாற்றங்களிற்கான கூற்றிற்கு கொண்டுவரப்பட வேண்டிய போதிலும் அதிற்குப் பதிலாக மீளாய்வாண்டிற்கான மொத்த திரண்ட வருமானம் உரிமை மூலதன மாற்றங்களிற்கான கூற்றில் நிறுத்திவைத்த உழைப்புக்களாக கொண்டுவரப்பட்டிருந்தது. இதன் விளைவால், மீளாய்வாண்டிற்கான இலாபம் ரூபா 53.71 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட உரிமை மூலதன மாற்றங்களில் கூற்றில் அதே தொகையால் மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்கள் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) **எல்கேஏஎஸ் 20 – அரசாங்க மானியங்களிற்கான கணக்கீடும் அரசாங்க உதவிகளின் வெளிப்பாடும்** -இது ரெதடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் செயற்திட்டம் மற்றும் சமுதாய அடிப்படையிலான கிராமிய நீர் வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்ற செயற்திட்டம் என்பவற்றிற்காக பெறப்பட்ட வெளிநாட்டு மானியங்கள் முறையே ரூபா 447.3 மில்லியன் மற்றும் ரூபா 167.6 மில்லியன் தொகையாக இருந்தன. இருந்தபோதிலும் தொடர்புபட்ட நடைபெறும் வேலைகள் சபையின் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ii) 8 ஆண்டுகளிற்கு மேலாக மாற்றமடையாதிருந்த 29 செயற்திட்டங்கள் தொடர்பில் ரூபா 10,358.39 மில்லியன் கூட்டு மொத்த தொகையான வெளிநாட்டு மானிய மீதிகள் திரட்டப்படாமல் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. திரட்டப்படாமை காரணமாக நிதிக்கூற்றுக்களின் தாக்கம் அந்த வெளிநாட்டு மானியங்கள் தொடர்பான தகவல்கள் கிடைக்காமையால் கணக்காய்வில் மதிப்பிட முடியாதிருந்தது.

(iii) மேலும், வெளிநாட்டு மானியங்களாக கணக்கிடப்பட்ட ரூபா 2,457.5 மில்லியன் கூட்டு மொத்த தொகையான குறித்த செயற்திட்டங்கள் தொடர்பான ஒதுக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டப்பட்டிருக்கவில்லை.

**“திறைசேரி 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையான கடன்களையும் வட்டியையும் அரசாங்க உரிமை மூலதனத்திற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு மாற்றுவதற்கு அனுமதித்திருந்தது**’’ என இது தொடர்பில் சபையின் தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

(iv) சந்தை வீதங்களை விட குறைவான வட்டி வீதங்களில் வழங்கப்பட்ட அரசாங்க கடன்களில் நிதி இலாபங்களை நிதிக்கூற்றுக்களில் அரசாங்க மானியங்களாக கருதப்பட்டிருக்கவில்லை.

‘‘அரசாங்கம் கடன்களிற்கும் துணைநிலைக் கடன்களிற்கும் இணைக்கப்பட்ட மானியங்கள் மற்றும் ஏனைய உதவிகளுடன் சேர்த்து கடன் திட்டங்களை வழங்கியிருந்த மூலதன வழங்குநர்களின் தனியொரு பங்குதாரராக உள்ளது. ஆகவே, அரசாங்கம் வழங்கியிருந்த அதே நிபந்தனைகளின் அடிப்படையில் கடன்கள் வழங்குகின்ற போட்டி அமைப்புக்கள் இருக்கவில்லை. எனவே, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட கடன் திட்டங்களின் வட்டி வீதங்களின் சந்தை வீதத்தைப் பெறமுடியாதிருந்தது’’ என இது தொடர்பில் சபையின் தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

(v) நிலையான சொத்துக்களாகப் பெறப்பட்ட ரூபா 39 மில்லியன் தொகையான வெளிநாட்டு மானியங்கள் மீளாய்வாண்டின் போது திரட்டப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 47.3 மில்லியன் கூட்டு மொத்த தொகையான நடைமுறைப் பொறுப்புக்கள் மற்றும் வருமானக் கணக்குகளின் கீழ் காட்டப்பட்ட வரவு மீதிகள் மற்றும் ரூபா 24.1 மில்லியன் கூட்டு மொத்த தொகையான நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் செலவினக் கணக்குகளின் கீழ் காட்டப்பட்ட செலவு மீதிகள் அசாதாரணமாக காணப்பட்டதுடன் அத்தகையவாறு மீளாய்வாண்டிற்கான சபையின் நிதிவிளைவுகள் மற்றும் நிதி நிலைமைகள் சிதைவடைந்திருந்தது.

(ஆ) கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட புதிய நீர் வழங்கல் இணைப்புகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், தண்ணீர் நுகர்வோர்களிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 14.9 மில்லியன் தொகையான மாதாந்த தவணைப் பணங்கள் புதிய இணைப்பு கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா 363 மில்லியன் கிரயத்தில் ஸ்பானிஸ் சுனாமி வசதிகள் நிதியத்தை பயன்படுத்தி மொரட்டுவை, பாணந்துறை மற்றும் நீர்கொழும்பிற்காக குடி தண்ணீர் சுத்திகரிப்பு வசதிகளின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணச் செயற்திட்டத்தின் கீழ் 2009 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட கடல் நீர் சுத்திகரிப்பு பொறி 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்து ஆண்டுகள் கடந்த பின்னரும் மூலதனமாக்கப்பட்டிருக்காததுடன் அத்தகையவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 109,865.63 மில்லியன் தொகையான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் (பிபிஈ) அதே தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது. வசதியானது கொள்ளளவில் உள்ள பிரச்சனைகள் காரணமாக 2010 யூலையில் இருந்து செயற்பாட்டில் இருக்கவில்லை என மேலும் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், 2010 முதல் 2014 வரையான காலத்திற்காக மின்சாரம், மோட்டார் வாகனங்களின் வாடகைக்கமர்த்தல் மற்றும் உபகரணங்களிற்கான சேவை

உடன்படிக்கைகள் என்பவற்றிற்காக ரூபா 14.8 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 331.86 மில்லியன் கிரயத்தில் நீரிறைக்கும் இயந்திரத்தின் உதிரிப் பாகங்களின் இருப்புக்கள் முன்னைய ஆண்டின் போது நடைமுறையல்லாச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டு இதன்படி பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது. அதில், ரூபா 47.26 மில்லியன் பெறுமானத்தேய்வு சாட்டுதல்களின் மீளாய்வாண்டின் போது ரூபா 11 மில்லியன் தொகை மாத்திரம் திருத்தப்பட்டிருந்தது. இருந்த போதிலும், அந்த சொத்துக்களின் உரிய கிரயம் முன்னைய ஆண்டு சீராக்கல்கள் போல் திருத்தப்பட்டிருக்காததுடன் அத்தகையவாறு ஆதனங்கள் பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்ட நீரிறைக்கும் இயந்திரங்களின் உதிரிப்பாகங்கள் மீதி மற்றும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட பெறுமானத் தேய்வு முறையே ரூபா 331.86 மில்லியன் மற்றும் ரூபா 36.26 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) ஆறு பிராந்திய அலுவலகங்களால் பயன்படுத்தப்பட்டிருந்த இரண்டு காணிகள், மூன்று ஆய்வுகூடங்கள், ஒரு கட்டமைப்பு, இரண்டு மொத்த மீற்றர்கள், மூன்று தளபாட விடயங்கள், மற்றும் ஐந்து கணணிகள் மற்றும் ஏனைய உபகரணங்கள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பூர்த்தியாக்கப்பட்ட வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா 38.24 மில்லியன் பெறுமதியான இருப்புக்கள் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(எ) மீள்சுழற்சி வேலைகளின் கீழ் 20 திட்டங்கள் 2014 திசெம்பர் 31 இல் பூர்த்தியாக்கப்பட்டு வாடிக்கையாளருக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 20 மில்லியன் தெளிவுபடுத்தப்படாத மீதிகள் அந்த திட்டங்கள் தொடர்பில் மீள் சுழற்சி வாடிக்கையாளர் முற்பணக் கணக்கில் அவதானிக்கப்பட்டது.

(ஏ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களிற்கு முற்கொண்டுவரப்பட்ட இருப்பு மீதிகள் ரூபா 5,300.38 மில்லியனாக இருந்த போதிலும் அத்திகதியில் உள்ளவாறான பௌதீக மெய்மையாய்வு மீதி ரூபா 5,360.13 மில்லியனாக இருந்தது. எனவே, 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட இருப்பு மீதி ரூபா 59.75 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நடைபெறும் வேலைக்கும் மூன்று வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நேரொத்த மீதிகளிற்கும் இடையில் அவதானிக்கப்பட்ட ரூபா 10,969.57 மில்லியன் தேறிய வித்தியாசம் இருந்த போதிலும் இது இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நடைபெறும் வேலை மீதி 149,059.34 மில்லியன் அவற்றில் உள்ளடங்கிய எதிர்மறையான மீதிகள் காரணமாக ரூபா 650,382 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டு உரிய தரப்பினருக்கு கையளிக்கப்பட்டிருந்த ரூபா 129.1 மில்லியன் பெறுமதியான இரண்டு வெளிவாரி செயற்திட்டங்கள் மற்றும் மூன்று பூர்த்தியாக்கப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பான செலவினம் மற்றும் ரூபா 159.1 மில்லியன் கிரயத்திலான மூலதனமாக்கப்பட்ட செயற்திட்டங்கள் தெளிவுபடுத்தப்படாமல் நடைபெறும் வேலையில் இருந்தது.

(ஓ) 64 செயற்திட்டங்கள் தொடர்பில் நடைபெறும் வேலைகளின் கீழ் காட்டப்பட்ட ரூபா 1,588 மில்லியன் கூட்டு மொத்த தொகையான மீதிகள் நிதிக்கூற்றுக்களில் அவசியமான சீராக்கல்களை செய்யும் நோக்கில் புலனாய்வு செய்யப்படாமல் மூன்று முதல் ஏழு ஆண்டுகள் வீச்சிலான காலப்பகுதிக்கு மேலாக மாற்றமடையாது இருந்தது.

(ஔ) ரூபா 3,667.39 மில்லியன் தொகையான 109 நீர் வழங்கல் செயற்திட்டங்களின் பூர்த்தியாக்கப்பட்ட கிரயம் மற்றும் நியமிக்கப்பட்டவை மூலதனமாக்கப்படாமல் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நடைபெறும் வேலைகளில் இருந்தது.

(க) ரூபா 669.1 மில்லியன் தொகையான நடைபெறும் வேலைகள் தொடர்புபட்டிருக்காத செலவினம் இரத்தினபுரி பிரதேச அலுவலகத்தின் நடைபெறும் வேலையில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(கா) 72 நீர் வழங்கல் திட்டங்களின் நிர்மாணங்கள் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நீர் வழங்கல் திட்டங்கள் தொடர்பிலான ரூபா 14.19 மில்லியன் வரவு மீதிகள் மற்றும் ரூபா 13.47 மில்லியன் செலவு மீதிகள் நிதிக்கூற்றுக்களில் வைப்புக்கள் மற்றும் முற்பணங்களின் கீழ் முறையற்ற விதத்தில் காட்டப்பட்டிருந்தது.

(கி) ரூபா 14,705.34 மில்லியன் தொகையான நீர் வழங்கல் திட்டங்களிற்காக இலங்கை அரசாங்கத்தால் பெறப்பட்ட 17 வெளிநாட்டு கடன்களிற்கான துணைநிலை கடன் உடன்படிக்கைகள் திறைசேரியுடன் கைசாத்திடப் பட்டிருக்காததுடன் இதன் விளைவால், அத்தகைய கடன் மற்றும் மானிய பகுதிகள் கணக்காய்வில் தனித்தனியாக இனங்காண முடியாதிருந்தது. மேலும், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட அந்த கடன் மீதிகள், மானியங்கள், மானியங்களின் திரட்டு மற்றும் வட்டிச் செலவினம் மற்றும் அவற்றின் பொறுப்புக்கள் என்பவற்றின் உண்மைத்தன்மை மற்றும் முழுமைகள் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

இது தொடர்பில் சபையின் தலைவர் ''தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை துணைநிலைக் கடன்களை ஓழுங்கு செய்வதற்கு திறைசேரிக்கு இதனை அறிவித்திருந்தது, ஆனால், எங்களுடைய வேண்டுகைக்கு சாதகமான பதிலை அளித்திருக்கவில்லை. எனவே, சபையானது இந்த ஐயவினாவிற்கு பதிலளிக்கும் நிலையில் இருக்கவில்லை'' என குறிப்பிட்டிருந்தார்.

(கீ) 2011, 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிற்காக ரூபா 955.22 மில்லியன் கூட்டு மொத்த தொகையான கீழ் குறிப்பிட்ட செயற்திட்டங்களிற்காக பெறப்பட்ட கடன்களில் செலுத்த வேண்டிய வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செயற்திட்டத்தின் பெயர் | செலுத்த வேண்டிய வட்டித் தொகை | உரிய காலப்பகுதி |
|---|---|---|
| | ரூபா மில்லியன் | |
| யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் செயற்திட்டம் | 873.3 | 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டின் முதலாவது அரைப்பகுதி |
| அம்பாறை மாவட்டத்தின் பாதுகாப்பற்ற பகுதிகளிற்காக ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டம்- கட்டம் III | 77.24 | 2010 மற்றும் 2012 |
| வருமானமற்ற தண்ணீர் (என்டபிள்யூஎஸ்டிபீ) பொறியியல் கற்கை / பிரதான திட்டத்தின் ஆலோசனை சேவைகள் மீதான செயற்திட்டம் | 4.68 | 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டின் முதலாவது அரைப்பகுதி |

மேலும், வருமானமற்ற தண்ணீர் (என்ஆர்டபிள்யூ) பொறியியல் கற்கை / பிரதான திட்டத்தின் ஆலோசனை சேவைகள் மீதான செயற்திட்டம் தொடர்பில் 2013 ஆண்டின் இரண்டாவது காலாண்டிற்காக செலுத்த வேண்டிய வட்டியும் மதிப்பிடப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(கு) உள்ளபடியான வட்டிக் கொடுப்பனவுகளிற்கும் காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்ட் வட்டிக் கொடுப்பனவுகளிற்கும் இடையில் ரூபா 17.36 மில்லியன் ஆன வித்தியாசம் அவதானிக்க்பபட்டது.

(கூ) மீள்சுழற்சி வேலை தொடர்பில் ரூபா 23.48 மில்லியன் வரவு மீதி 2014 திசெம்பர் 31 இல் அவதானிக்கப்பட்டது, ஆதலால், வாடிக்கையாளர் முற்பண மீதி நிதிக்கூற்றுக்களில் அதே தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(கெ) முறைமைத் தவறு காரணமாக ரூபா 4.5 மில்லியனால் காகிதாதி இருப்புக்களின் பெறுமதி அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(கே) ரூபா 37.53 மில்லியன் தொகையான மீள்சுழற்சி வேலைகள் தொடர்பில் ஏற்பட்ட நிர்மாணக் கிரயத்தின் அறவிட வேண்டிய மீதிகள் சம்பந்தப்பட்ட வாடிக்கையாளர் முற்பண்களிற்கு எதிராக சரிசெய்யப்படாமல் நிதிக்கூற்றுக்களில் வைப்புக்கள் மற்றும் முற்பணங்களின் கீழ் முறையற்ற விதத்தில் காட்டப்பட்டிருந்தது.

(கை) திம்பிரிகஸ்கட்டுவ பொலிஸ் நிலைய மீள்சுழற்சி திட்ட வேலைக்காக ரூபா 4 மில்லியன் செலவினம் ஏற்பட்டிருந்த போதிலும் கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ரூபா 2 மில்லியன் மாத்திரம் கொண்டுவரப்பட்டிருந்தது.

### 2.2.3 இனங்காணப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்கள் மற்றும் வியாபாரக் கடன்பட்டோர், ஏனைய கடன்பட்டோர்களின் மற்றும் கடன்பட்டோர் சேகரிப்பு கட்டுப்பாட்டு கணக்குகள் பட்டியல் என்பவற்றில் காட்டப்பட்ட தொகைகளுக்கு இடையில் முறையே ரூபா 1,181.38 மில்லியன், ரூபா 106.4 மில்லியன் மற்றும் ரூபா 101.17 மில்லியன் தொகையான வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) எட்டு வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 826.25 மில்லியன் நடைமுறை வேலை மீதிகள் பிராந்திய ஆதார நிலையத்தால் (ஆர்எஸ்சீ) சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலில் காட்டப்பட்ட நேரொத்த மீதியுடன் இணக்கம் செய்யப்பட்டிருக்காததுடன் இது தொடர்பில் ரூபா 30.40 மில்லியன் தேறிய வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மூலதன நடைபெறும் வேலை மீதிகள் ஆறு வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களிற்காக பிராந்திய ஆதார நிலையத்தால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளில் காட்டப்பட்ட மூலதனமாக்கல் தொகையுடன் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே, ரூபா32.69 மில்லியனான தேறிய வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஈ) களுத்துறை, கண்டி மற்றும் அநுராதபுரம் பிராந்தியங்களினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீள்சுழற்சி வேலைகளின் பெறுமதிக்கும் உரிய பட்டோலைகளில் காட்டப்பட்ட நேரொத்த தொகைக்கும் இடையில் ரூபா 3.97 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. மேலும், நிதிக்கூற்றில் காட்டப்பட்ட தொகைக்கும் உரிய முற்பணக் கணக்கு பட்டோலையில் காட்டப்பட்ட தொகைக்கும் இடையில் ரூபா 759,187 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(உ) விற்பனைகளிலிருந்தான வருமானம் தொடர்பான தகவல்கள் சபையின் வர்த்தகப் பிரிவால் பேணப்படுகின்றன. எவ்வாறாயினும், நிதிக்கூற்றுத் தொகைக்கும் அளவை மானிகள் விற்பனை, மொத்த வழங்கல் மற்றும் பவுசர் வழங்கல் என்பவற்றின் உரிய பிரிவுகளால் பேணப்பட்ட பதிவேடுகளிலுள்ள தொகைக்கும் இடையில் முறையே ரூபா 57 மில்லியன், ரூபா 276,000 மற்றும் ரூபா 2.4 மில்லியன் ஆன குறிப்பிடத்தக்களவு வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஊ) களுகங்கை செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் மீளாய்வாண்டிற்கான சபையின் நிதிக்கூற்றுக்கள் என்பவற்றில் காட்டப்பட்ட கடன் வட்டிக்கு இடையில் ரூபா 886,102 ஆன இணக்கம் செய்யப்படாத வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 இணக்கம் செய்யப்படாத வித்தியாசங்கள்

----------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இன்னமும் இனங்காண வேண்டியிருந்த நிதி நிலமைக்கூற்றிலுள்ள நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்ட இனங்காணப்படாது நீண்டகாலம் நிலுவையாகவிருக்கின்ற வரவு மற்றும் செலவு மீதிகள் முறையே ரூபா 236.23 மில்லியன் மற்றும் ரூபா 190.26 மில்லியனாக உள்ளன.

அதற்கு மேல், செயற்பாடற்றவையாக ஏற்கனவே வகைப்படுத்தப்பட்ட பல மீதிகள் உள்ளதுடன் ரூபா 7,263.59 மில்லியன் கூட்டு மொத்த தொகையான ஏனைய இனங்காணப்படாத மீதிகள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருந்தது.

(ஆ) 1996 முதல் 2004 வரையான காலத்திலிருந்து கணக்குகளில் இருக்கின்ற ரூபா 37.75 மில்லியன் மொத்தமான இனங்காணப்படாத மீதிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் இரண்டு சேகரிப்பு கட்டுப்பாட்டு கணக்குகளின் வரவு மற்றும் செலவு மீதிகள் முறையே ரூபா 11 மில்லியன் மற்றும் ரூபா 43.2 மில்லியன் தொகை மூன்று ஆண்டுகளிற்கு மேலான காலமாக தெளிவுபடுத்தப்படாமல் இருந்தது. உள்ளக காசு மாற்ற கட்டுப்பாட்டுக் கணக்கு ஆண்டின் இறுதியில் தெளிவுபடுத்தப்பட வேண்டிய போதிலும் ரூபா 1,028,061 மற்றும் ரூபா 232,146 ஆன வரவு மற்றும் செலவு மீதிகள் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக இருந்தது.

(ஈ) இனங்காணப்பட்டு தீர்க்கப்படாமல் நீண்ட காலமாக இரத்தினபுரி மற்றும் மாத்தறை பிரதேசங்களின் கணக்குகளில் ரூபா 2.17 மில்லியன் மொத்தமான இனங்காணப்படாத மீதிகள் இருந்தது.

### 2.2.5 கிடைக்கவேண்டிய மற்றும் செலுத்தப்படவேண்டிய கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 முதல் 2006 வரையான காலப்பகுதி மற்றும் 2009 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளிற்காக முறையே ரூபா 5.33 மில்லியன், ரூபா 6 மில்லியன் மற்றும் ரூபா 3.19 மில்லியன் தொகையான கொடுக்க வேண்டிய பெறுமதி சேரி வரி 2015 திசெம்பர் 31 வரையும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பில் சபையின் தலைவர் வேண்டுகை கடிதம் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு தெளிவுபடுத்தலிற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது'' இதற்கான பதில் இன்னமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை'' குறிப்பிட்டிருந்தார்.

(ஆ) ரூபா 1,295.09 மில்லியன் கூட்டு மொத்த தொகையான வியாபார கடன்பட்டோர், கடன்பட்டோர் சேகரிப்புகள், கழிவகற்றல் கடன்பட்டோர், புதிய இணைப்பு கடன்பட்டோர், கொழும்பு மாநகர சபை கடன்பட்டோர் மற்றும் ஏனைய கடன்பட்டோர் மீதிகள் அறவிடப்படாமல் 3 ஆண்டுகளிற்கு மேலாக இருந்தது.

(இ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை (ஆர்டிஏ), மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (பிஆர்டிஏ) மற்றும் நகர சபைகள் என்பவற்றில் சபையால் வைத்திருந்த ரூபா 17.93 மில்லியன் குறுகிய கால வைப்பு மீதிகள் 1999 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்படாது இருந்தது.

(ஈ) 2002 ஆம் ஆண்டிற்கு முன்னர் முந்திய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சிற்கு வழங்கப்பட்ட ரூபா 19.61 மில்லியன் தொகையான முற்பணம் 2015 யூலை இறுதி வரையும் தீர்க்கப்படாதிருந்ததுடன் அவற்றின் அறவீட்டிற்கு எவ்வித நடவடிக்கையும் சபையால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) காணி சுவீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2010 முதல் 2012 வரையான காலத்தின் போது ரூபா 2.17 மில்லியன் தொகையான அத்தகைய காணியின் சுவீகரிப்பிற்காக வழங்கப்பட்ட முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 1999 முதல் 2013 வரையான காலத்தின் போது ஒப்பந்தகாரரொருவருக்கு வழங்கப்பட்ட ரூபா 47.54 மில்லியன் முற்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(எ) 1995 முதல் 2009 வரையான காலத்தின் போது கொள்வனவுகளிற்காக உத்தியோகத்தர்கள் மற்றும் அமைப்புகளிற்கு வழங்கப்பட்ட ரூபா 248,165 தொகையான முற்பணங்கள் 2015 யூலை இறுதி வரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காட்டப்பட்ட ஒவ்வாரு விடயங்களிற்கும் எதிரே குறிப்பிடப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விடயம் | பெறுமதி | கிடைக்கப்பெறாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | |
| (அ) | குறுகிய கால பிணை வைப்பு மீதிகள் | 26.67 | விரிவான பட்டியல் |
| (ஆ) | செலுத்தப்படாத வெளியீட்டு பெறுமதி சேர் வரிகள் (மூன்று பிராந்திய அலுவலகங்கள்) | 27.22 | செலுத்தாமைக்கான காரணங்கள் |
| (இ) | பெறுமதி சேர் வரிக் கணக்கிலுள்ள வரவு மீதி (மேல் மத்திய பிராந்திய ஆதார நிலையம்) | 9.36 | தீர்க்காமைக்காமைக்கான காரணங்கள் |
| (ஈ) | மீள்சுழற்சி வேலைகளிற்கான வாடிக்கையாளர் முற்பணங்கள் | 2.73 | விரிவான பட்டியல் |
| (உ) | 57 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் காலாண்டு மற்றும் அரையாண்டு வட்டி- | - | கணிப்பீட்டு முறை |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | நகர அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் நீண்ட கால நிலுவையாகவிருக்கின்ற கடன் மீதி - ஏடிபீ | 20.71 | செலுத்தாமைக்கான காரணங்கள் |
| (எ) | 30 செயற்திட்டங்களின் மதிப்பிடப்பட்ட கிரயங்கள் | 29,010 | அமைச்சரவை தீர்மானம் |
| (ஏ) | கொழும்பு வடக்கு நகர நீர் வழங்கல் செயற்திட்டம் (பொதி- 01) மற்றும் றுகுணுபுர நீர் வழங்கல் திட்டம் உள்நாட்டு வங்கி கடன்களால் செய்யப்பட்டது. என்பவற்றின் கிரயம் | 6,808.97 | கேள்வி மதிப்பாய்வு அறிக்கைகள் மற்றும் ஒப்பந்தகாரர் தெரிவு தொடர்பான விபரங்கள் |

## 2.3. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 387 | 8 நடைமுறை கணக்குகள் தொடர்பில் காசுப் புத்தகத்தில் ரூபா 96.47 மில்லியன் மொத்தமான மேலதிக பற்று மீதிகள் அவதானிக்கப்பட்டது. |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை | |
| | 8.3.9 ஆம் பிரிவு | (i) சமுதாய மற்றும் தண்ணீர் சேவைகளின் மீது மூன்றாவது சர்வதேச கருத்தரங்கின் செலவுகளை செய்வதற்காக ஐந்து வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களிடமிருந்து ரூபா 9.4 மில்லியன் தொகை பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த செலவினம் செயற்திட்டத்தின் நோக்கங்களிற்கு முரணாக உள்ளதுடன் மேற்குறிப்பிட்ட நோக்கத்திற்காக செயற்திட்ட நிதிகளை பயன்படுத்துவதற்கு பொது திறைசேரி செயலாளரிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.<br><br>(ii) பதினொரு மோட்டார் வாகனங்கள் வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்களின் அனுமதிப்பத்திர புதுப்பித்தல் மற்றும் காப்புறுதிக் கொள்கைகள் என்பவற்றிற்காக ரூபா 1,108,564 ஏற்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| | | (iii) சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக மீளாய்வாண்டின் போது ஏழு ஊழியர்கள் வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தார்கள் |
| (இ) | 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | சபையின் ஆட்சேர்ப்பு திட்டம் மற்றும் பதவியுயர்வு நடைமுறை என்பவற்றிற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | சபையின் களஞ்சிய முகாமைத்துவ வழிகாட்டி | சபையின் அங்கீகாரம் பெற்ற பின்னர் 3 மாதங்களிற்குள் பழுதடைந்த பொருட்கள் அகற்றப்பட்டோ அல்லது அழிக்கப்பட்டோ இருக்க வேண்டும். ஆனால், ரூபா 14.66 மில்லியன் பெறுமதியான பழுதடைந்த இருப்புக்கள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரண்டு ஆண்டுகளை விட அதிகமான காலம் இருப்பில் இருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் படி, 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 1,049.39 மில்லியன் நேரொத்த வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடும் போது ரூபா 1,425.29 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தினை விளைவித்திருந்தது ஆதலால், நிதிசார் விளைவுகளில் ரூபா 375.9 மில்லியன் முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அளவைமானி விற்பனை வருமானம் மற்றும் புதிய இணைப்புக்களின் வருமானம் என்பவற்றின் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு நிதிவிளைவுகளில் இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பல்வேறு கட்டங்களில் நிதிசார் விளைவுகளின் பொழிப்பை பின்வரும் அட்டவணை தருகின்றது.

| **விபரம்** | **திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது** | | **முரண்** | |
|---|---|---|---|---|
| | **2014** ரூபா மில்லியன் | **2013** ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | % |
| வருமானம் | 18,710.05 | 17,216.62 | 1,493.43 | 8.67 |
| விற்பனைக்கிரயம் | (11,325.83) | (10,156.77) | (1,169.06) | 11.51 |
| **மொத்த இலாபம்** | **7,384.22** | **7,059.85** | **324.37** | **4.59** |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் மற்றும் இலாபம் | 1,390.07 | 1,195.41 | 194.66 | 20.78 |

| | | | | |
|---|---|---|---|---|
| நிர்வாகச் செலவினம் | (5,985.33) | (5,832.37) | (153.90) | 2.64 |
| ஏனைய செயற்பாட்டுச் செலவினம் | (334.37) | (559.43) | 225.06 | 40.23 |
| **செயற்பாட்டு இலாபம் / (நட்டம்)** | **2,454.59** | **1,863.46** | **591.13** | **34.55** |
| நிதி வருமானம் | 213.24 | 225.69 | (12.45) | -5.52 |
| நிதிக் கிரயம் | (1,242.53) | (1,039.76) | (202.77) | 19.50 |
| **வரிக்கு முன்னரான இலாபம் / (நட்டம்)** | **1,425.3** | **1,049.39** | **375.91** | **35.82** |
| வரி | (53.11) | (47.47) | (5.64) | 11.88 |
| **ஆண்டிற்கான இலாபம் / (நட்டம்)** | **1,372.19** | **1,001.92** | **370.27** | **36.96** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் மொத்த இலாபம் மற்றும் ஏனைய செயற்பாட்டு வருமானம் மற்றும் இலாபம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 4.59 சதவீதம் மற்றும் 20.78 சதவீதத்தால் அதிகரித்திருந்த அதேநேரம் ஏனைய செயற்பாட்டுச் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 40.23 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. இந்த சாதகமான தாக்கம் 2.64 சதவீதத்தால் நிர்வாகச் செலவினம் மற்றும் 19.5 சதவீதத்தால் நிதிக்கிரயம் அதிகரித்தமையை முகாமை செய்வதற்கு போதிய வலுவை வழங்கியிருந்தது.

(ஆ) 2013 ஆம் ஆண்டில் ஒரு ஊழியருக்கான ரூபா 709,319 பங்களிப்பு 2014 ஆம் ஆண்டில் 0.69 சதவீதத்தால் குறைவடைந்திருந்த அதேநேரம், 2013 ஆம் ஆண்டில் ஒரு ஊழியருக்கான தேறிய இலாபம் ரூபா 100,759 ஆனது 2014 ஆம் ஆண்டில் ரூபா 136,019 இற்கு அதிகரித்திருந்ததுடன் 35 சதவீத அதிகரிப்பை வெளப்படுத்தப்படுகின்றது.

(இ) 2013 ஆம் ஆண்டில் நுகரப்பட்ட தண்ணீரின் ஒரு அலகிற்கு ரூபா 44.74 ஆன இலாபம் 2014 ஆம் ஆண்டில் 1.77 சதவீதத்தால் அதிகரித்திருந்த அதேநேரம், 2013 ஆம் ஆண்டில் நுகரப்பட்ட தண்ணீரின் ஒரு அலகிற்கு ரூபா 26.24 ஆன உற்பத்திக் கிரயம் 2014 ஆம் ஆண்டில் ரூபா 27.56 இற்கு அதிகரித்திருந்ததுடன் 5 சதவீத அதிகரிப்பை வெளிப்படுத்துகின்றது.

## 4. தொழிற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### (அ) நிதிச் செயலாற்றல்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொதுத் திறைசேரியின் ஊடாக சபையால் பெறப்பட்ட மொத்த வெளிநாட்டுக் கடன் மீதி மொத்தச் சொத்துக்களின் ரூபா 41,156 மில்லியன் அல்லது 14.55 சதவீதம் ஆகும். கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டவாறு, 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையிலுள்ள கடன் தவணைப் பணம் ரூபா 6,353 மில்லியனானதுடன் இதன்படி தாமதத்திற்காக செலுத்தப்பட்ட மேலதிக வட்டி ரூபா 245 மில்லியனாகும்.

| ஆண்டு | நிலுவையிலுள்ள கடன் தவணைப் பணம் | | | உரிய திகதியில் வட்டி செலுத்தப்படாமைக்கு செலுத்தப்பட்ட மேலதிக வட்டி |
|---|---|---|---|---|
| | முதல் கொடுப்பனவு | வட்டி | மொத்தம் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 2014 | 1,078 | 2,349 | 3,427 | - |
| 2013 | 1,005 | 563 | 1,568 | 60 |
| 2012 | 990 | - | 990 | 119 |
| 2011 | 368 | - | 368 | 66 |
| **மொத்தம்** | **3,441** | **2,912** | **6,353** | **245** |

**(ஆ) மீள்சுழற்சி வேலைகளின் அமுலாக்கல்**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மீள்சுழற்சி வேலைகள் ஒரு ஆண்டினைவிட குறைந்த அதாவது குறுகிய காலத்திற்குள் பூர்த்தியாக்க வேண்டியிருந்த வேலைகளாகும். எவ்வாறாயினும், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரண்டு ஆண்டுகள் காலத்திற்கு மேலாக கையேற்கப்பட்ட 130 மீள்சுழற்சி வேலைகள் தொடர்பில் வாடிக்கையாளரிடமிருந்து பெறப்பட்ட ரூபா 419.33 மில்லியன் கூட்டு மொத்த தொகையான முற்பணம் எவ்வித மாற்றமும் இல்லாமல் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. இருப்பினும், தனிப்பட்ட வேலைகள் சம்பந்தப்பட்ட முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் தாமதங்களிற்கான காரணங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(ii) 2010 முதல் 2014 வரையான காலத்திலிருந்து முற்பணங்களாக ரூபா 39.14 மில்லியன் தொகை பெறப்பட்ட போதிலும் 11 மீள்சுழற்சி வேலைத் திட்டங்களின் நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டு இறுதிவரையும் தொடங்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) சுத்தமான நீரின் உற்பத்தி மற்றும் விநியோகம்**

சபையானது 2013 ஆம் ஆண்டின் 547 மில்லியன் கனமீற்றர் உற்பத்தியுடன் ஒப்பிடும் போது 2014 ஆம் ஆண்டின் போது 575 மில்லியன் கனமீற்றர் சுத்தமான தண்ணீரை உற்பத்தி செய்திருந்ததுடன் இது 5.12 சதவீத அதிகரிப்பை காட்டியது. மீளாய்வாண்டு இறுதியில் வழங்கப்பட்ட தண்ணீர் வழங்கல் இணைப்புக்களின் எண்ணிக்கை 124,251 ஆக இருந்தமையால், முன்னைய ஆண்டுடன் அதனை ஒப்பிடும் போது 3.35 சதவீத அதிகரிப்பைக் காட்டுகின்றது.

**(ஈ) வருமானமற்ற நீர் (என்ஆர்டபிள்யூ)**

வருமானமற்ற நீர் காரணமாக சபைக்கு ஏற்பட்ட நட்டம் இனங்காணப்பட்டு தனியாகக் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. ஆனால் அது, சாதாரண கிரயமாக கணக்கிற்குக் கொண்டு வரப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு மற்றும் கடந்த நான்கு ஆண்டுகளிற்கான வருமானமற்ற நீர் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| விபரம் | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 |
| --- | --- | --- | --- | --- | --- |
| தண்ணீர் உற்பத்தி (கன மீற்றர்) | 574.99 | 547.0 | 525.6 | 490.0 | 469.0 |
| தண்ணீர் நுகர்வு (கன மீற்றர்) | 410.92 | 381.6 | 368.5 | 344.5 | 321.5 |
| வருமானமற்ற தண்ணீர் (கன மீற்றர்) | 164.07 | 165.4 | 157.1 | 145.5 | 147.5 |
| தண்ணீர் உற்பத்தியின் சதவீதமாக வருமானமற்ற தண்ணீர் | **28.53** | **30.24** | **29.89** | **24.64** | **31.45** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஆம் ஆண்டில் சபையால் உற்பத்தி செய்யப்பட்ட நீரின் அளவில் நீர்க்கசிவு, சட்ட விரோத இணைப்புக்கள், நீர் இலவசமாக வழங்கல் மற்றும் நிர்வாக காரணங்கள் என்பவற்றினால் வருமானமற்ற நீர் 28.53 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய அதேநேரம் 2014 இல் கொழும்பு நகரத்தின் வருமானமற்ற நீர் பகுதி 46.65 சதவீதமாக இருந்தது.

(ii) சபையானது சட்ட விரோத இணைப்புக்களைக் குறைப்பதற்கும், பிரதான நீர் விநியோக குழாய்களில் தற்காலிக தடங்கலை திருத்தும் நடைமுறையை விரைவுபடுத்துவதற்கும் கடந்த காலங்களில் சபையால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும் 2011 ஆண்டுடன் ஒப்பிடும் போது நடப்பாண்டில் வருமானமற்ற நீரின் வீதம் 12.76 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(iii) 75 ஆண்டுகளிற்கு மேல் பழமைவாய்ந்த கொழும்பு நகரத்தின் பிரதான நீர் விநியோக முறைமைகளைப் நவீனப்படுத்துவதற்கான தேவை ஏற்பட்டதால் அந்த நோக்கத்திற்கான திட்டங்களைத் தயாரித்து, அமுல்ப்படுத்துவதற்காக சபையின் கவனம் அவசரமாக கோரப்படுகின்றது. தற்போது இது தொடர்பாக இரண்டு வெளிநாட்டு நிதியளிக்கப்படும் செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படுகின்ற போதிலும், பிரதான நீர்க் குழாய்களின் போதிய மீள்நிர்மாணம் அதிலிருந்து அடையப்பட்டிருக்கவில்லை.

நீர்க் கசிவுகள் காரணமாக மாற்றப்பட வேண்டிய பிரதான நீர் விநியோகக் குழாய்கள் இதுவரை இனங்காணப்பட்டிருக்கவில்லை. பாரிய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பிரேரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மிக மெதுவான மட்டத்திலேயே நகர்ந்திருந்தன.

(iv) கொழும்பு நகரைத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் வருமானமற்ற நீரைக் குறைப்பதற்காக சபையின் கவனம் போதாமலிருந்ததுடன் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட இலக்குகளும் சாத்தியமற்றவையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(v) ரூபா 3,100.17 மில்லியன் மதிப்பிடப்பட்ட செலவினத்துடன் 6 செயற்திட்டங்கள் வருமானமற்ற தண்ணீரை குறைப்பதற்கு தொடங்கப்பட்டிருந்த போதிலும் கருத்திற்கொள்ள வேண்டிய குறைவு இனங்காண முடியாதிருந்தது.

**(உ) கழிவுநீர் முறைமை**

-----------------------------

நகரங்களில் கழிவு நீரகற்றுவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளிற்கான முன்னேற்றங்களை மேற்கொள்வதற்கான தேவை நாட்டின் பொருளாதார அபிவிருத்தியுடன் சேர்ந்ததாக இடம்பெற்ற நகரமயமாக்கல் காரணமாக ஏற்பட்டிருந்தது. அத்தகைய வசதிகளை வழங்குதல் சபையின் பொறுப்பாக இருந்த போதிலும், அண்மைய ஆண்டுகளில் இந்தப் பிரிவில் போதிய முன்னேற்றம் காட்டப்பட்டிருக்கவில்லை. கழிவு நீரகற்றும் வசதிகளின் வழங்கல், ஒரு தேசியக் கொள்கையாக சனத்தொகையின் 7 சதவீதமாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அதன் எய்தலை பரிசோதிப்பதற்கான தகவல் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

**(ஊ) வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள்**

-----------------------------------------------------------------

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகளைப் பயன்படுத்துவதன் மூலம் நீர் வழங்கல் மற்றும் சுகாதார சேவைகளிற்காக அதிகமான செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இது தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) அதிகமான பாரிய மட்ட வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் உரிய திகதிகளில் பூர்த்திசெய்யப்பட்டிருக்காததுடன் செயற்திட்டக் காலங்களை நீடித்தமையின் விளைவாக மேலதிக வேலைகள் மற்றும் விலை அதிகரிப்புக்கள் காரணமாக கிரயங்கள் மிக உயர்வாக ஏற்பட்டிருந்தது.

(ii) சீரான கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலிற்காக பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

4.2 **முகாமைத்துவ திறமையீனங்கள்**

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) சபையானது காகாபள்ளிய நீர் வழங்கல் செயற்திட்டத்திற்காக தண்ணீர் கோபுரம் மற்றும் உத்தியோகபூர்வ வதிவிடம் என்பவற்றினை நிர்மாணிப்பதற்கு 1994 மே மாதத்தில் 0.3895 ஹெக்டயர் காணியொன்றினை கொள்வனவு செய்திருந்தது. செயற்திட்டமானது 9.5 பேர்ச் காணியை பயன்படுத்தி பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் மிகுதி காணி 2015 திசெம்பர் 31 வரையும் பிரதேச சபைக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மானிப்பாய் கட்டுடை பகுதியில் இரண்டு காணிகள் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் பிரதேச அலுவலகம் மற்றும் கட்டுடை குளம் நிர்மாணிக்கும் நோக்கில் 2010 இல் தொடங்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும், காணி கொள்வனவு 2015 திசெம்பர் 31 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, 2010 முதல் 2014 வரையான காலத்தின் போது ரூபா 6.17 மில்லியன் முதல் ரூபா 9.52 மில்லியன் வரை மதிப்பீட்டுப் பெறுமதி அதிகரித்திருந்தது.

(இ) ரூபா 3.2 மில்லியன் செலவினம் ஏற்பட்டு தாபிக்கப்பட்ட புதிதாக அறிமுகப்படுத்திய கணனிமயப்படுத்திய பொருளிருப்பு முகாமைத்துவ முறைமை ஊடாக போதுமான தகவல்களை பெறத்தவறியமை காரணமாக பிரதான களஞ்சியத்திலுள்ள (சீ பிரிவு) டிஐ குழாய்கள் தொடர்பில் இருப்பு பேரேட்டு மீதிக்கும் கணனி மயப்படுத்தப்பட்ட பொருளிருப்பு முறைமை மீதிக்கும் இடையில் ரூபா 9.60 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஈ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான மொத்த வருமானமற்ற தண்ணீர் உற்பத்தி 164.07 கன மீற்றர்களாக இருந்தது. அந்த வருமானமற்ற தண்ணீரின் மொத்த நேர் செலவினம் அண்ணளவாக ரூபா 1,291.29 மில்லியனானதுடன் இது சபைக்கு நட்டமாக இருந்தது என அவதானிக்கப்பட்டது.

(உ) ஒரு மாதத்தின் மதிப்பிடப்பட்ட விலைப்பட்டியல் மீது மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவு செவ்வையின் பிரகாரம், 11,004 புதிய இணைப்புக்களில் 8,795 மதிப்பிடப்பட்ட விலைப் பட்டியல்கள் செயற்பாடற்ற தண்ணீர் அளவை மானிகளிற்காக வழங்கப்பட்டது என வெளிப்பட்டது. ஆகவே, தண்ணீர் அளவை மானிகள் நியம தரத்தில் இருக்கவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2008 இல் வழங்கப்பட்ட சுவீடிஸ் சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு முகவராண்மையால் (எஸ்ஐடிஏ) நிதியளிக்கப்பட்ட மொறட்டுவ/ இரத்மலானை மற்றும் ஜா - எல / எக்கல கழிவு நீர் அகற்றல் செயற்திட்டத்தின் ஒப்பந்தமானது ஒப்பந்தகாரரின் வங்கி வங்குரோத்து காரணமாக 2013 இல் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

செயற்திட்டமானது மேற்குறித்த ஒப்பந்தகாரர் தொடர்பில் வெளிநாட்டு வங்கியொன்றிடமிருந்து செயலாற்றல் பிணைமுறி மற்றும் பிடித்துவைத்தல் பிணைமுறி ஏற்றுக்கொள்ளும் நேரத்தில் உள்நாட்டு வங்கியொன்றிடமிருந்து சான்றுபடுத்தலைப் பெறுவதற்கு 2006 இன் கொள்வனவு கைநூலிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்கவில்லை. இதன்விளைவால், செயற்திட்டமானது ஐ.அ.டொலர் 9.06 மில்லியன் பெறுமதியான செயலாற்றல் பிணைமுறி மற்றும் ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட ஐ.அ.டொலர் 7.96 மில்லியன் பெறுமதியான பிடித்துவைத்தல் பிணைமுறி என்பன காசாக்குவதற்கு தவறியிருந்தது. மேற்குறிப்பிட்ட தவறு காரணமாக, செயற்திட்டமானது உள்நாட்டு சட்ட செயற்பாடுகளைப் பெறுவதற்கு முயற்சிக்காதிருந்ததுடன் சர்வதேச சட்டச் செயற்பாடுகளிற்குள் நுழைவதற்கான சான்றுகளும் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை. மேற்குறிப்பிட்ட ஒப்பந்தத்திலிருந்து சபைக்கான நட்டம் மதிப்பிடப்பட்டிருக்காததுடன் அதன் பொறுப்பாண்மையை 2015 யூலை 31 இறுதி வரையும் நிர்ணயித்திருக்கவில்லை.

## 4.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 11.34 மில்லியன் பெறுமதியான நீர் அளவை மாணிகள் மற்றும் ரூபா 39.92 மில்லியன் பெறுமதியான டிஐ குழாய்கள் நீண்ட காலமாக அசையாத மற்றும் மெதுவாக நகருபவையாக பிரதான களஞ்சியத்தில் இருந்தது.

(ஆ) சபைக்கு சுனாமி மானியத்தின் கீழ் பெறப்பட்ட ரூபா 24.18 மில்லியன் பெறுமதியான இருப்புக்கள் எவ்வித நோக்கங்களிற்காகவும் பயன்படுத்தாமல் நீண்ட காலமாக பிரதான களஞ்சியத்தில் இருந்தது.

(இ) ரூபா 368 மில்லியன் பெறுமதியான அசையாத இருப்புக்கள் மற்றும் ரூபா 328 மில்லியன் பெறுமதியான மெதுவாக நகரும் இருப்புக்கள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்புக்களில் இருந்ததுடன் இது சபையின் மொத்த இருப்புக்களின் பெறுமதியில் 12.39 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) ரூபா 9.9 மில்லியன் பெறுமதியான கைவிடப்பட்ட இருப்புக்கள் மற்றும் ரூபா 4.14 மில்லியன் பெறுமதியான பழுதடைந்த இருப்புக்கள் அவற்றின் மீது முறையான நடவடிக்கை எடுக்கப்படாமல் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

### 4.4 சர்ச்சைக்குரிய விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 17.95 மில்லியன் தொகையான இடைப்போக்கிலுள்ள சரக்கின் மீதி புலனாய்வு செய்யப்படாமல் இரண்டு ஆண்டு காலத்திற்கு மேலாக இருந்தது.

(ஆ) சபையானது பொதுத் திறைசேரியின் விசேட அனுமதியை பெற்றுக்கொள்ளாமல் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் சார்பில் சபையால் ஏற்பட்ட மேந்தலைச் செலவினமாக செயற்திட்ட பதவியணியின் மொத்த மாதாந்த சம்பளங்களிலிருந்து 20 சதவீதம் சாட்டுதல் செய்திருந்தது. மீளாய்வாண்டின் போது கழிக்கப்பட்ட அவ்வாறான மொத்த மேந்தலைச் செலவினம் ரூபா 444.44 மில்லியனாக இருந்தது.

(இ) அனுமதிக்கப்பட்ட வீதங்களின் அடிப்படையில் தொழில்சார் தகைமையுடைய உத்தியோகத்தர்களால் கிரய மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் உள்ளூர் வங்கி கடன்களால் நிதியளிக்கப்பட்ட 5 நீர் வழங்கல் செயற்திட்டங்களின் மதிப்பிடப்பட்ட ஆரம்ப கிரயம் ரூபா 15,286 மில்லியனால் அல்லது 122 சதவீதத்திற்கும் 338 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் அதிகரித்திருந்தது.

(ஈ) சபை பணிப்பாளர்களிடமிருந்து முன்னங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு பதிலாக அமைச்சரவையின் அங்கீகாரத்தில் ரூபா 15,746 மில்லியனால் 6 நீர் வழங்கல் செயற்திட்டங்களின் ஆரம்ப கிரயம் அதிகரித்திருந்தது.

(உ) ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 8,400 மில்லியன் கிரயத்திலான 4 நீர் வழங்கல் செயற்திட்டங்கள் தொடர்பில் உள்நாட்டு வங்கிகளுடன் கடன் உடன்படிக்கைகள் கைசாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கியால் நிதியளிக்கப்பட்ட வருமானமற்ற தண்ணீர் செயற்திட்டம் (எஸ்எல்-66) வெற்றியளித்திருக்காததுடன் பின்னர் செயற்திட்டமானது இரத்துசெய்யப்பட்டிருந்ததுடன் மேற்குறிப்பிட்ட செயற்திட்டத்திற்காக ஏற்பட்ட ரூபா 172 மில்லியன் ஆலோசனைக் கட்டணம் கொழும்பு பெரும்பாக புனரமைப்பு செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. எனவே, இது சபைக்கு நட்டத்தை விளைவித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(எ) களுத்துறையில் பொலிஸ் பயிற்சிக் கல்லூரி மற்றும் நடுரகேன காணி என்பவற்றில் நீரிறைக்கும் இயந்திரம் பொருத்துவதற்கு சபையால் ரூபா 3.88 மில்லியன் தொகையான முற்பணங்கள் பெறப்பட்டிருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 வரை அவற்றில் ஏற்பட்ட மேந்தலைச் செலவினம் ரூபா 833,350 தொகை மாத்திரம் பெறப்பட்ட முற்பணங்களிலிருந்து கழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவற்றில் ஏற்பட்ட நேர் செலவினங்களின் விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(ஆ) கட்டுப்பாட்டுக் கணக்குகளை இணக்கம் செய்தல்
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) இருப்புக் கட்டுப்பாடு
(ஈ) நாளேட்டுப் பதிவுகளின் கணக்கீடு மீதான கட்டுப்பாடு
(உ) செயற்திட்ட நிர்வாகமும் செயலாற்றல் மீளாய்வும்